நேர் இலக்கியம்

111 4-5

சித்திரை, வைகாசி

1998

72
Y31m2;N26
N98·3·4-5
199376

No. M. 2169 Vol. III—4 &

# ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர் மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ் : 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] அக்டோபர்—நவம்பர் [1928


OFFICE OF THE REGISTRAR
No.
20 DEC 1928
MADRAS

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 19. | ஹிதோபதேசம் | 71 |
| 20. | இந்தியாவில் கிருமபரிபாலன முறை | 72 |
| 21. | மணிலாக்கொட்டை சோர்வு நோய் | 75 |
| 22. | கிராம அபிவிருத்தி முயர்ச்சிகளைத் தக்கபடி நடத்துவதற்கு ஒரு பிரதான நிர்வாஹ ஸபை அவசியமாக வேண்டியது | 79 |
| 23. | கிராம சுகாதார நிலைமையுயர்த்தச் சில யோசனைகள் | 80 |
| 24. | உழவனது உழைப்பு I | 83 |
| 25. | பிரம்மச்சரிய வாழ்வு | 85 |
| 26. | காடுகளும் கிராம ஜனங்களும் | 89 |


Annual Subscription (Inclusive of Postage)
Inland Rs. 3 : Fo[illegible]n Rs 4—8—0.
Single copy, Inlanc[illegible] : Foreign As 8.

Rural India reaches the Vi[illegible] and Towns of India
It is the best medium [illegible] advertisement.

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதாரர்களும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரேஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ருஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரேஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.

முகாம்:—பாலவாக்கம்

ஊத்துக்கோட்டை போஸ்ட்டு

செங்கல்பட்டு ஜில்லா.

---

## டாக்டர் 'ஜீ' பீ. என்பவரின் சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகைமாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.




புட்டி ஒன்றுக்கு விலை அணா 4.

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்[illegible]ணம் பொடியும் விற்கப்படும்.

குருபசவா அ[illegible] கம்பெனி, லிமிடெட்

தபால் பெட்டி நெ. 51[illegible]

விலாசம் "மெடிமே[illegible]"

பார்க் டவுன்,

சென்னை


# ரூரல் இந்தியா


(பாரேஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்.

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.


DEC 1928


வால்யூம் III.] அக்டோபர்—நவம்பர் 1928 [நெ 4 & 5.


## ஹிதோப தேசம்.

1. இனியவசனம் பேசி வஞ்சிக்கப் பார்ப்பவர்களிடம் சிநேகம் செய்யாதே. அவர்கள் முதலில் அநுகூலஞ் செய்பவர்களைப்போல் நடந்து கொள்வார்கள்; பிறகு பிராணசங்கடத்திற் காளாக்குவார்கள்.

2. செட்டாய்ச் சிலவிட ஒவ்வொருவரும் சிறு வயது முதல் பழகவேண்டும். செட்டுள்ளவன் கையிலேதான் செல்வம் சேரும். செட்டாய்ச் செலவிடுவதென்றால், ஒருவர்க்கும் ஒரு சிறிதும் ஈயாமல் பரம லோபியாயிருப்பதல்ல. வரவுக்குத்தக்கபடி செய்யவேண்டிய செலவுகளைச் செலவிடுதலே செட்டாம்.

3. புறங்கூறுவதாகாது. அதனால் பேரிடருண்டாகும். காணாதவிடத்தில் பிறரை இழந்துபேசுவதே புறக்கூறுதலாம். ஒருவனைப்பற்றி இன்னொருவன் அவனில்லாத இடத்தில் இகழ்வதேதனால்? அவனிடம் கொண்ட பொறாமையினாலே யாதலால், புறங் கூறுதலுக்குப் பொறாமையே காரணமாம். பொறாமை ஒருவனை எந்தவிதத்திலும் தாழ்த்துமே தவிர உயர்த்தாது. இதனைப் பாண்டவர்களிடம் பொறாமைகொண்ட துரியோதனதியர் கதியை ஓதியுணர்ந்தார் நன்கறிவர். ஆதலின் பொறாமைக்கு இடங்கொடாதே.

4. கடன்வாங்க அஞ்சு. கூடியவரையில் அதைத்தடு. கடன் பட்டவன் உலகத்தில் எல்லோருக்கும் விரோதியாவான். அவனை எல்லோரும் இகழ்வார். அவன் பொய்பேச அஞ்சான். விசுவாச காதகமும், களவும் கொலையும், அவனுக்கு சர்வசாதாரணமான செய்கை களாய்விடும்.

**5. "செய்ய உத்தேசித்திருப்பதைப்பற்றி வீணுகப்பேசாதே. உடனே செய்"—என்று வில்லியம்ஹேண்ட் என்னும் மேனுட்டு மேதாவியொருவர் கட்டளையிடுகிருர். ஆதலின் தொடங்கிய தொழிலில் வீண் காலதாமதம் செய்வதாகாதென்றுணர்க.**

## I இந்தியாவில் கிராம பரிபாலன முறை.

சில நாள்களுக்கு முன்னே ஆனிபிஸண்டு அம்மையார் அவர்கள் ஒய். எம். ஐ. ஏ. ஸங்கத்தின் முன்பாக இந்திய கிராம பரிபாலன முறையைப்பற்றி ஓர் உபந்நியாஸத்தைச் செய்தார். அவ்வுபந்யாஸத்தின் முக்கிய பாகங்களை யெடுத்துச் சொல்லுகிறோம் :—

இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்களுள், அநேகர் மாணவர்களாகையாலும், அவர்கள் வயதுவந்த பின்பு இராஜ்ய முயற்சிகளில் அமையக்கூடியவர்களாதலாலும், இந்தியர்களின் இராஜீய புத்தியின் இயல்பை விளக்குகிற இந்திய கிராம பரிபாலன முறையை விவரிக்கத் தொடங்குகிறேன். உலகத்திலேயே, இந்திய கிராம பரிபாலன ஏற்பாட்டைப்போன்ற ஏற்பாடு மற்ற எந்த தேசத்திலும் இல்லை. அதைக் கவனித்து அறிய முயலுவீர்களாகில், அது பல, பல நூற்றாண்டுகளாக ஒவ்வொரு கிராமத்திலும் இடைவிடாமல் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறதென்றும், கிராமங்களில் ஆயிர, ஆயிர வருஷங்களாக ஜீவித்துக்கொண்டும், வாழ்ந்துகொண்டும் சரித்திரங்களை வஹித்துக்கொண்டு மிருந்திருக்கிறதென்றும் அறிவீர்கள். வெகு, வெகு காலங்களுக்கு முன், வெள்ளம் ஒதுங்கி ஐரோப்பா கண்டம் ஏற்பட்ட காலத்தில், ஆசியா கண்டத்திலிருந்து உங்களுடைய முன்னோர்கள் அக்கண்டத்தைப் பிரவேசித்துக் குடியேறி வஸிக்க ஆரம்பித்தார்கள். அப்படிக் குடியேறி வஸிக்க ஆரம்பித்த உடனே, அவர்கள் அங்கேயும், அவர்கள் மத்திய ஆசியாவில் அநுஷ்டித்த, கிராமபரிபாலன முறையையே கைக்கொண்டு அநுஷ்டித்தார்கள். கீழ் நாட்டு தேசங்களின் கிராம பரிபாலன ஏற்பாடுகளையும், மேநாட்டு தேசங்களுடைய கிராம பரிபாலன ஏற்பாடுகளையும் கவனித்தறிந்து எழுதியிருக்கிற, ஸர் ஹென்றி மெயின் என்னும் பெரியார் அவைகளிரண்டும் இயல்பில் ஒன்றேதானென்றும், இரண்டும் ஆசியாவில்தான் முதல் முதலில் உண்டாயினவென்றும், மேநாட்டு தேசங்களில் கிராம பரிபா[illegible] ஆரியர்கள் டியூடர்களென்கிற பெயருடன்

199376



ஐரோப்பாவிற்குச் சென்று குடியேறின பொழுது உண்டாக்கப்பட்டதென்றும் வரைகிருர். கிராம பரிபாலன முறையும், நகர பரிபாலன முறையும், ஆசியாவில் உண்டானவைகளே. ஆசியாவில்தான் ஜனஆக்ஷி வழிகளும், உணர்ச்சிகளும் ஆதியில் இருந்தன. ஜன ஆக்ஷி உணர்ச்சி இந்தியாவிற்குப் புதியதல்ல. கிராமங்களில் கிராம பரிபாலன முறையும், நகரங்களில் நகர பரிபாலன முறையும் நடைபெற்றுக்கிராம ஜனங்களும், நகர ஜனங்களும் ஊக்கத்துடன் அவைகளை நடத்தி வந்தால்தான் தேசம் முழுவதும் ஜனசுதந்தர உணர்ச்சி ஊன்றி ஓங்கும். அநேகப் பிரதேசத்தை ஆளுகிற, பிரதான கவர்மெண்டுகள் குலைக்கப்படக் கூடும், கிராம பரிபாலன முறையை வஹித்த தேசம் அழியவே அழியாது. நான் இந்திய கிராம பரிபாலன முறையைப்பற்றிக் கற்றறிவதில் அதிக காலத்தைச்செலவழித்திருக்கிறேன். அப்பரிபாலன முறைகளை அநுஷ்டித்து வந்து, ஜனங்கள் எத்தன்மையாக பிரஜாசுதந்தரங்களைக்காப்பாற்றினார்களென்றும், அவர்கள் பரிபாலனை முயர்ச்சிகளில் எவ்வளவு திறைமையுடன் பாடு பட்டார்களென்றும், கற்றறிந்திருக்கிறேன். இந்தியாவின் கிராம பரிபாலன ஏற்பாடு ஆதிகாலம் முதற்கொண்டு அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிற ஏற்பாடாதலால், இந்தியப்பிரஜா சுதந்தர உணர்ச்சியானது வெகு காலமாக இருந்து கொண்டிருக்கிற உணர்ச்சியே. ஆகவே, இந்தியாவிற்குத்தகுந்த ஜன ஆக்ஷி முறையை ஏற்படுத்துவதில், கிராம ஆக்ஷி முறைச் சரி வர நிர்மாணிக்கப்பட வேண்டியதென்பது கவனிக்கப்படவேண்டியது. கிராம பரிபாலன முறை ஏற்படுத்தப்பட்ட பின்பு, அதே மாதிரியாகவே, கிராம பரிபாலன ஏற்பாட்டைப்போலவே, தாலூகா, ஜில்லா, மாஹாணம், இவைகளின் பரிபாலன முறைகள் ஏற்படுத்தப் படவேண்டும். தாலூகா பரிபாலனத்தில் கிராமப் பஞ்சாயத்துகளின் பிரதிநிதிகளும், ஜில்லா பரிபாலனத்தில் தாலூகாப் பிரதிநிதிகளும், மாஹாண பரிபாலனத்தில் ஜில்லாப் பிரதிநிதிகளும் நிர்வாஹத்தில் அமையவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளைப்போலவே, தாலூகா, ஜில்லா, மாஹாணப் பஞ்சாயத்துகளும் அமைந்து வியவஹரிக்கவேண்டும். அம்மாதிரியாகத்தான், பல இந்திய இராஜாங்கங்கள் வியவஹரித்தனவென்றும் அறிகிறோம். சந்திரகுப்தன் கவர்மெண்டு இலாகா ஒவ்வொன்றுக்கும் பஞ்சாயத்து முறை ஏற்படுத்தி ஆக்ஷியை நடத்தினன். சந்

திரகுப்தனுடைய மந்திரியாகிய கௌடில்யனுடைய அர்த்த சாஸ்திரத்திலிருந்து இவ்விஷயம் நன்ருய் அறியப்படுகிறது. மனுஸ்மிருதிகளிலும், பின்பு 1000 வருடங்களுக்கு அப்புறம் எழுதப்பட்ட சுக்ர நீதி என்கிற கிரந்தத்திலும், பஞ்சாயத்து விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்கள், அவைகளின் மத்தியபாகங்களில் கோயிலோடும், அதைச் சுற்றி வரிசை வரிசைகளான வீடுகளோடும், அமைந்திருந்தன. ஒவ்வொரு வீடும் புழக்கடைத் தோட்டத்தை யுடைத்தா யிருந்தது. கிராம பரிபாலனமானது கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் சபையால் நடத்தப்பட்டது. மேற்சொல்லிய சபைதான் பஞ்சாயத்து. பெரிய கிராமங்களில் பஞ்சாயத்தே எல்லா வியவஹாரங்களையும் நடத்தாமல், தனித்தனி இலாகாவிற்கென்ற பிரத்தியேக உள்சபைகளை ஏற்படுத்தி அவைகளின் மூலமாய் வியவஹாரங்களை நடத்தி வந்தது. கவர்மெண்டின் தலைமை ஸ்தானத்தில் மாத்திரம் நாளவில் தேறுதல்களுக்குப் பதிலாக நியமனங்களின் மூலமாக உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். மேலும், அரசர்களின் கிராமங்கள் என்று சிலகிராமங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றும் அரசனுக்கு அல்லது ஒரே நபருக்குச் சொந்தமாயிருந்தது. ஆதலால், அவைகளில் அரசனே அல்லது சொந்தக்காரனே சம்பள ஊழியர்களின் மூலமாககிராம வேலைகளை நடத்துவதுவழக்கமாயிருந்தது. கலகங்கள், படையெடுப்புகள் இவைகளிலிருந்து ஸம்ரக்ஷணை நிமித்தம் கிராம நிலங்களில் ஒரு பாகம் அரசனுக்கென்று பகுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. இவ்வழக்கத்திலிருந்து நிலவரி ஏற்பட்டது. அக்பர் சக்ரவர்த்தி காலம் முதல் நிலத்திற்குப் பதிலாக கிராமங்களிலிருந்து உண்டாகிற மாசூலில் ஒரு பாகம் அரசர்களால் அடையப்பட்டு வந்தது. அந்த பாகம், கிராமத்தின் மொத்த உற்பத்தியில் 12இல் ஒரு பங்கிலிருந்து 4இல் ஒரு பங்கு வரையில் இருந்திருக்கிறது. அந்த பாக வசூலைக்கொண்டுதான் அரசன் ராஜ்யத்தில் உத்தியோகஸ்தர்களையும், ஸைன்னியத்தையும், மந்திரிமார்களையும் வைத்து சம்பளங்களைக்கொடுத்து வந்தான். 2000 வருஷங்களுக்கு முன் இந்தியாவை வந்து பார்த்த மெகஸ்தனிஸ் என்கிற க்ரீஸ் தேசத்துப்பிரயாணி ராஜ்யபார விவரங்களும் கிராம பரிபாலன விவரங்களும் இத்தன்மையாகவே யிருந்தனவென்றுகூறியிருக்கிறார்.



ஈஸ்டு இந்தியா கம்பனியார் வருகிற வரையில், இவ்வித ஏற்பாடுகள் வழங்கியன. அவர்கள் வந்த பிறகுதான் அவைகள் அழிந்துபோய் விட்டன. மேகஸ் தனிஸ் இந்தியாவில், மற்ற தேசங்களிலிருப்பது போல், அடிமைக்காரர்களில்லாமையையும், ஸ்திரீகளிடத்தில் வியபசார தோஷமில்லாமையையும், புருஷர்களுடைய தீர சுவ பாவத்தையும், ஜனங்களின் சத்தியகுணத்தையும், வியவஸாயிகளுடைய சோமபலில்லாத ஊழியங்களையும், தொழிலாளிகளுடைய வேலைத்திறமையையும், பற்றி உயர்வாக எழுதி யிருக்கிறார் இந்தியாவில் 140 ஸமஸ்தானங்களிருந்தனவென்றும், அவைகளில் பிரஜைகள் கஷ்டமில்லாமல் சுகமாய் வாழ்ந்தார்களென்றும், கூறியிருக்கிறார்.

இந்திய ஜனங்கள் சுகத்திலும், செல்வத்திலும் வாழவேண்டுமானல், இந்திய கிராமங்கள் மேற்சொன்ன மாதிரி அமைக்கப்படவேண்டும். ராஜ்யத்தின் பிரதான கவர்மெண்டின் சிலவிற்காக அவைகள் தங்களுடைய வரும்படியில் ஒரு பாகத்தை அதற்குக் கொடுக்கவேண்டும். கிராம ஏற்பாடு வெகு வெகு காலங்களாக க்ஷேமத்தையும் செல்வத்தையும் விளைத்திருக்கிறபடியால், அதைத் திரும்பவும் சரியாய் ஏற்படுத்த முயலவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கு, பஞ்சாயத்தார்கள் கிராமத்தில் தேர்தலின் மூலமாகவே ஏற்படுத்தப்படவேண்டும். இப்படி இந்திய தேசத்தின் ஆக்ஷி முறை ஏற்பட்டால், இந்தியர்கள் தேச பக்தியையும், தேசோத்தாரண உணர்ச்சிகளையும் வஹிப்பார்கள். மேலும், இந்தியாவிற்கு மேநாட்டு இராஜீய முறைகளைக் காட்டிலும், தன்னுடைய இயல்போடொத்த சொந்தமான, கோடியான கோடி வருஷங்களாக ஜனங்களுக்குச் சுகத்தையும் செல்வத்தையும் விளைத்த, கிராம பரிபாலனத்தை அடிப்படையாக வஹிக்கிற, இராஜீய முறையே சரியானது.

## II Ground-nut Wilt in South Arcot.
## மணிலாக் கோட்டை "சோர்வு நோய்."

தென் ஆற்காடு ஜில்லாவில் சில வருஷங்களில் இப்பயிர் சோர்வு நோயால்பீடிக்கப்படுகிறது. இவ்வியாதி 'ரைஜாக்டோனியா படாட்டிகோலா' என்னும் பூஞ்சாணச்சிற்றுயிர்களால்உண்டாகிறது. பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் விதைக்கப்பட்டு ஜூன் ஜூலை மாதங்களில் அறுவடையாகும், இறவைப்பயிர் உதவியால்சாகுபடியாகும், மணி[illegible]

199376

தான் இவ்வியாதியால் பெரும்பாலும் பீடிக்கப்படுகிறது. மழை காலத்தில் விளைவிக்கப்படும்பயிரிலோ இந்நோய்எங்கேயோ அபூர்வமாய் உண்டாவதாகத் தெரிகிறது. இந்நோயால் பீடிக்கப்படும் பயிர்கள் சில வருஷங்களில் சொற்ப நஷ்டத்தையும் வேறு சில வருஷங்களில் விசேஷ நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறது. இதற்குக் காலபேத வேற்றுமையையே காரணமாகச் சொல்லலாம்.

1926ம் வருஷத்தில் சர்க்கார் மணிலாக் கொட்டை பரீட்சார்த்தப்பண்ணையாகிய பாலான்குப்பத்தில் 16ம் நம்பர் வயலில் இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட பயிர் அதிக நஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. அதன்பேரில் இந்நோயால் பயிருக்கு அதிக நஷ்டமடைய ஏதுவிருக்கிறதென்று கருதி அதைச் சீர்திருத்துவதற்கு வழிகளைக் கண்டு பிடிக்கவேண்டியது அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகவே பாலூர்குப்பத்திலிருக்கும் மணிலாக் கொட்டைப் பரீட்சார்த்தப் பண்ணையில் 1927-ம் வருஷ முதல் பரீட்சைகள் செய்ய ஆரம்பிக்கப்பட்டன.

ஆனல், அவ்வருஷத்தில் அவ்வியாதி நஷ்டத்தை யுண்டாக்கக் கூடிய அளவுக்கும் பரவவில்லை. இச்சிற்றுயிர்கள் எப்போதும் நிலத்திலிருந்தே பரவ ஆரம்பிப்பதாகத்தெரிவதால் நிலசெய்நேர்த்தியிலிருந்தே இதைத் தடுக்கக் கூடுமென்று யோசனைசெய்து நிலத்தை பண்படுத்துவதாலும், பலவேறு எருக்களை போடுவதாலும் தடுக்கயோசனை செய்து பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மேலும் எந்தெந்த தினுசு மணிலாக்கொட்டை இவ்வியாதியால் அதிகமாய் பீடிக்கப் படுகிறதென்றும் கவனிக்கப்பட்டு வருகிறது.

நிலத்தை பண் படுத்தும் முறைகள்.

பின் சொல்லும் ரசாயன எருக்களைப் பயிர் விதைப்பதற்கு ஒரு வாரத்திற்குமுன் போட்டு உழுது மண்ணுடன் கலக்கும்படி செய்து அப்பால் விதைக்கப்பட்டது.

(1) ஏக்கருக்கு 200 இராத்தல் பிளீச்சிங் பவுடர் என்னும மருந்து போடல்.

(2). ஏக்கர் ஒன்றுக்கு 200 இராத்தல் பொட்டாசியம சல்பேட் என்னும் மருந்து போடல் (இது சாம்பல்காரம் கொடுப்பதற்காகவே போடப்பட்டது)



(3) ஒரு ஏக்கருக்கு அரை டன் சல்பேட் ஆப் அம்மோனியா என்னும் ரசாயன எருவுடன் கால் டன் சுண்ணாம்பு காரம் சேர்த்துக் கொடுத்தல்.

(4) ஒருபாகம் மயில் துத்தத்துடன் மூன்றுபாகம் தண்ணீர் விட்டுச் சேர்த்த மருந்துத் தண்ணீர் சதுர அடிக்கு அரை காலன் வீதம் சேர்த்துப் பரீட்சித்தல்.

(5) நிலத்தின்பேரில் முழுவதும் செத்தை சண்டுகள் தூவி செத்தையைக கொளுத்தி மண்ணை உஷ்ணப்படுத்தல்.

இப்படிச் செய் நேர்த்தி செய்து பார்த்த ஒவ்வொரு வயலுக்கும் பக்கத்தில் இவ்வாறு ஒன்றும் செய்யாமல் மாமூல்மாதிரியில்சாதாரண முறையில் விதைத்த ஒவ்வொருவயலிலும் விதைத்து அதற்கும் இதற்கும் உள்ள தாரதம்மியங்களை ஒப்பிட்டுப் பார்த்ததில் ஏகர் ஒன்றுக்கு 200 இராத்தல் வீதம் பிளீசிங்பவுடர் கலந்து பரீட்சை செய்த தளையிலும், செத்தை செத்தை போட்டு எரித்ததளையிலும் தான் இவ்வியாதி அதிக குறைவாய் இருந்ததாகவும் பொட்டாஷியம் சல்பேட் போட்டதளையிலும், அமொனியம் சல்பேட்டும் சுண்ணாம்பும் கலந்து போட்டதளையிலும், மயில் துத்தத்தண்ணீர் வார்த்து பக்குவம் செய்த தளையிலும் சாதாரணமாய் விதைத்த தளையின் மாசூலுக்கு அநேகமாய் அதிகவித்யாசம் இருந்ததாகவும் தெரியவில்லையென்றும் பரீட்சைகளால் கண்டு பிடிக்கப்பட்டன.

மேற்சொன்ன பரீட்சைகளல்லாமல் இன்னொரு பரீட்சையும் செய்யப்பட்டது. அது என்னவெனில் ஏக்கர்ஒன்றுக்கு 1000இராத்தல் சுண்ணாம்பு மட்டும் கலந்து விதைத்ததில் வியாதி ஏறக்குறைய அரை பாகம் தடுக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. மேற்கண்ட வாறு சுண்ணாம்பு கலந்துகொடுத்ததில் மாசூல்குறைவும்நஷ்டமும் நூற்றுக்கு 10.9 பாகமாசச் சுண்ணாம்பு போடாத்தளையில் நூற்றுக்குமாசூல் குறைவும் நஷ்டமும் 20.3 என்று கண்டு பிடிக்கப்பட்டது. இதில் முக்கியமாய்க் கிருஷிகர். கவனிக்கவேண்டிய ரசமான விஷயம் ஒன்றிருக்கிறது. அதென்னவெனில் ஏக்கருக்கு கால்டன் சுண்ணாம்பும் அதிசிலாக்கியமாய்த் தற்காலம் புகழ்ந்து பேசப்பட்ட சல்பேட் ஆப் அம்மோனியா அரை டன்னும் கலந்து கொடுத்ததில் நோய் பரவுதல் தெரியக்கூடிய அளவு தடுக்கப்படாமலிருக்க, ஏக்கருக்கு 1000 இரா

த்தல் சுண்ணும்பு மட்டும் கொடுத்ததில் ஏறக்குறைய நோயால் ஏற்பட்ட நஷ்டம், அரைபாகம் குறைவடைந்ததே.

செய் நேர்த்தியால் நோய் குறைதல்.

ஆழ உழுவதால் இந்நோய் பரவக்கூடிய விதை பூஞ்சாணநோய் பள்ளத்தில் புதைக்கப்பட்டுப்போவதால் அவைகள் பல்கிப்பெருகிமேலேவந்து செடிகளுக்கு நஷ்டம் உண்டாக்கக் கூடாமல் செய்துவிடக் கூடும். ஆறு அங்குலம்முதல் 9அங்குலம் ஆழம்வரை உழுத நிலத்தில் சோர்வு நோயால் பீடிக்கப்பட்ட செடிகளில் அளவைவிட 3 அங்குல ஆழம்உழுத நிலங்களில் அதிகசெடிகள் பீடிக்கப்பட்டதே இதற்குப் போதிய அத்தாக்ஷியாகும். 6 அங்குலம் முதல் 9 அங்குலம் ஆழம் வரை உழுத நிலத்தில் நிறை பயிர்களில் சுமார் 100க்கு 15 செடிகள் மட்டும்இவ்வியாதியால் பீடிக்கப்பட்டுசெத்திருக்கமூன்றங்குலஆழம் உழுத நிலத்தில் நூற்றுக்கு 20செடிகள்செத்ததே இதற்குப்போதிய சான்றாகும். ஆகையால் ஆழ உழுவதினாலும் கூடியவரையும் இந்நோயை அடக்ககூடுமென்றும் தோன்றுகிறது.

இதுவரையில் செய்த பரீட்சைகளினால் கிருஷிகர் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவென்றால் மணிலாப் பயிர் செய்ய உத்தேசிக்கும் நிலங்களை எவ்வளவு ஆழமாய் உழுவதற்கு சாத்யமோ அவ்வளவு ஆழமாய் உழுது ஏக்கர் ஒன்றுக்கு நமது நாட்டில் சகாயமாய்க் கிடைக்கும் சுண்ணும்பில் ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ராத்தல் சுண்ணும்பு, விதைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் கூட்டிக் கலந்து உழுது விதைத்தால் இவ்வியாதியை கூடிய வரையில் தடுக்கக் கூடுமென்று தெரிகிறது.

1927-1928ம் வருஷத்தில் பின்னால் குறிக்கப்பட்டிருக்கும் 20 தினுசு மணிலாக் கொட்டைகளில் பரீட்சைகள் நடத்திப்பார்க்கப்பட்டன. 20 தினுசுகளில் ஒரு தினுசாவது நோயால் முற்றிலும் பீடிக்கப்படாமலிருப்பதாகத் தெரியவில்லை. எல்லாதினுசுகளும் வெவ்வேறு அளவுக்கு 100க்கு9முதல் 27வரை பீடிக்கப்பட்டன. இவ்வருஷம் கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்கள் இந்நோயைத் தடுப்பதற்கு அனுகூலமானவைகளாயிருப்பதை உத்தேசித்து இன்னும் சில வருஷங்கள் பரீட்சைகள் நடத்தினால் இந்நோயை முற்றிலும் அறவே ஒழித்துவிடக் கூடுமென நம்பி இப்பரீட்சைகள் இன்னும் பல வருஷங்களில் செய்து பார்ப்பதாய் முடிவு செய்திருக்கிறதைக் கேட்க நாம் அதிக சந்தோஷப்படுகிறோம்.

(கிருஷிகன்).



## II. கிராம அபிவிருத்தி முயர்ச்சிகளைத்தக்கபடிநடத்துவதற்கு ஒரு பிரதான நிர்வாஹ ஸபை அவசியமாக வேண்டியது.

[நமது பத்திரிகைக்கென்று மிஸ்டர் கே. ஆர். ஆர். சாஸ்திரி எம். ஏ., பி. எல்., அவர்களால் எழுதப்பட்டது.]

நம்முடைய தேசத்தின் வியவஸாய க்ஷீணதசையை உயர்த்த கவர்மெண்டார் ஏற்றபடி பல துறைகளிலும் வலுத்த முயற்சிகளைச் செய்கிறதில்லை. அவர்களுடைய முயற்சிகள் வெகு குறைவாகவும், சீக்கிரத்தில் தேசத்திற்கு வியவஸாய ஒழுங்கை ஏற்படுத்தக் கூடியவைகளாகவும், இல்லை. தற்காலத்தில் நம்முடைய தேச வியவஸாய அபிவிருத்தியின் நிமித்தம், வரிப்பண மொத்தத்தில் ரூபாய்க்குக் காலணா வீதம் கூட கவர்மெண்டார் செலவு செய்கிறதில்லை.

வியவஸாய முன்னேற்ற நோக்கத்திற்காக ஸர்க்காருத்தியோகஸ்தரல்லாதவர்கள் சேர்ந்த அகிலஇந்தியாப்பொதுச்சங்கமொன்று ஏற்பட்டு உழைக்கவேண்டும். அப்படிப்பட்ட மாஹாணச் சங்கம் ஒன்று பஞ்சாப் மாஹாணத்தில் அமைந்திருக்கிறது. அது அந்த மாஹாணத்தில் அபிவிருத்திக்காக மாத்திரமே உழைக்குமேயொழிய இதர மாஹாண அபிவிருத்திக்காக அது உழைக்கமுடியாது. ஏற்படவேண்டிய இந்தியச்சங்கமும், மாஹாணச்சங்கங்களும், அபிவிருத்தி உண்டாகவேண்டிய நிமித்தம் கூட்டுறவு,மாட்டு வைத்திய, சுகாதார, கல்வி, வியவஸாய, பஞ்சாயத்து இலாகாக்களிலிருந்து பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்திலிருந்து யோஜனைகளை யடைந்துகொண்டு, வேலை செய்யவேண்டும். அச்சங்கங்களின் காரியதர்சிகள் ஸர்க்காருத்தியோகஸ்தரல்லாதவர்களாகவே யிருக்க வேண்டும். சென்னையிலுள்ள ஏகனாமிக் ஸபையாரும், ஒய். எம். ஸி. ஏ. சங்கத்தாரும், சமூக க்ஷேமத்திற்காக உழைப்பவர்களும், கிராமாந்தரச் சீரமைப்பு ஊழியர்களும் ஒன்று சேர்ந்து, ஸபைகூடி, ஆலோசித்து, கிராம அபிவிருத்தி சரிவர நடைபெற்று பயன்படுமாறு முயற்சி முறைகளை ஏற்படுத்தவேண்டும்.

இப்படியேற்படக் கூடிய மாஹாண போர்டு ஒவ்வொன்றும் இதர மாஹாண போர்டுகளோடு கலந்துகொண்டு, அகில இந்தியா கிராமச் சீரமைப்பு மஹாநாடு ஒன்றை பிரதி வருஷமும் நடத்த வேண்டும். அம்மஹா நாட்டில் மாஹாணச் சங்கங்களின் பிரதிநிதி

கள் அவர் அவருடைய மாஹாணச் சங்கத்தின் முயற்சிகளையும், குறைகளையும், சீர்கேடுகளையும், உண்டாயிருக்கிற பயன்களையும், பற்றி விவரமாகத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். அப்படி அவர்கள் தெரிவித்துக்கொண்டால் மாஹாணச் சங்கங்கள் பிழைகளைத் திருத்திக் கொள்ளக் கூடும்.

அகில இந்தியாச் சங்கமொன்றும், பிரதி மாஹாணத்திற்கென்ற மாஹாணச் சங்கங்களும், ஜில்லாச் சங்கங்களும், ஒவ்வொரு தாலூகாவிற்கென்ற தாலூகாச் சங்கங்களும், பிரதி கிராமத்திற்கென்ற கிராமச்சங்கங்களும், கோர்வையாக புணைக்கப்பட்டு ஏற்பட்டு வேலை செய்யவேண்டும்.

எல்லாத் தரிசு நிலங்களையும் சாகுபடியில்கொண்டுவந்து அதிக உற்பத்திகள் ஏற்படும்படியான முறைகளையும், குறைந்த அளவு ஸ்தலங்களில் அதிக வருமானங்கள் ஏற்படக்கூடிய முறைகளையும், உண்டாக்க இந்தச் சங்கங்கள் பாடுபடவேண்டும். கவர்மெண்டு இலாகாக்களின் முயற்சிகளே போதவே போதாது. வியவஸாய இலாகாவின் நிரூபணர்களும், சுகாதார இலாகாவின் சிப்பந்திகளும், பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், உழைப்பதால் மாத்திரமே பயன்கள் ஏற்படமாட்டா. ஸர்க்காருடைய வியவஸாயப் பிரகடனங்களினால் மாத்திரமே சீர் ஏற்படாது. உத்தியோகஸ்தரல்லாதவர்கள் சேர்ந்த அகில இந்தியா சபையும், மாஹாணச் சபைகளும், கிராமச் சபைகளும், ஏற்பட்டு ஒன்றோடொன்று தொடுக்கப்பட்டு வேலைகளைச் செய்தாலொழிய, ஒருக்காலும் கிராமச் சீரமைப்பே நம்முடைய தேசத்தில் ஏற்படாது.

## கிராமாந்தரச் சுகாதார நிலையை யுயர்த்தச் சில யோசனைகள்.

[டாக்டர். எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர், எம், பி., ஸி. எம்., எப். ஆர். ஐ. பி. எச்சு. அவர்களால் எழுதப்பட்டது]

### சேத்துப் புண்.

கீழ் நாட்டு தேசங்களில், ஜனங்கள் வேலைகளில் மேநாட்டவர்களைப்போலப் பாடுபடாமலும், உற்சாகமேயில்லாமலிருப்பதற்கும்,



நாகரீகத்தில் முன்னுக்கு வராமலுமிருப்பதற்கும் காரணம் அவர்கள் சேத்துப் புண்ணைச் சேர்ந்த நோய்களால் அவஸ்தைப் படுவதுதான் என்று ஆர்தர் தாம்ஸன் என்னும் ஒரு பெரியார் கண்டு பிடித்தார். அவருடைய அபிப்பிராயம் சரியானதுதான். நான் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் சுகாதார இலாகாவிற்குத் தலைவனாக இருந்தேன். நான் கொல்லத்தில் ஒரு தொழிற்சாலையை ஒரு ஸமயம்போய்ப் பார்வையிட்டபொழுது, அதன் மானேஜர் அந்தத் தொழிற்சாலையில் வேலைசெய்த ஆட்கள் கிழக்கு ஜில்லாக்களில் ஆட்கள் செய்கிற வேலையில் பாதி அளவைக்கூடச் செய்கிறதில்லை என்றும், அதற்குக் காரணம் திருவாங்கூர் ஸமஸ்தானம் எப்பொழுதும் ஈரமானசீதோஷ்ணஸ்திதியைவஹிப்பதால் அது ஜனங்களுக்கு சுறுசுறுப்பில்லாமையை விளைவிக்கிறதென்றும் கூறினார். அதிலிருந்து, நான் திருவாங்கூரில் சேத்துப்புண் புழு விசேஷமாக விருக்கிறதென்றும், அதன்ஜனங்கள் அந்தப் பூச்சிகளை வஹிப்பதால்தான் அவர்கள் சுறுசுறுப்பா யில்லையென்றும் கண்டறிந்தேன்.

சேத்துப் புண் புழுவானது சில மனிதர்களின் வயிற்றில், குடலில் சதைகளைக் கவ்விக்கொண்டு வஸித்து முட்டைகளை யிட்டுக்கொண்டுமிருக்கின்றன. மனிதர்கள் மலமிடும்பொழுது, மலத்தோடு அம்முட்டைகள் வெளிவருகின்றன. வெளிவந்த 3, 4 தினங்களில், அம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்படுகின்றன. குஞ்சுப் புழுக்கள் ஏற்பட்டவுடனே, அவைகள் தரையிலும், ஜலத்திலும் பரவுகின்றன. மனிதர்கள் நடக்கும்போது, அவைகள் உள்ளங்காலின் மூலமாக அவர்களின் உடம்புக்குள்ளே செல்கின்றன; மனிதர்கள் நீரைக் குடிக்கும்பொழுது நீரின் மூலமாக வயிற்றில் செல்கின்றன. அந்தப் புழு மனிதரை எந்த பாகத்தில் கடிக்கிறதோ, அவ்விடம் சிவந்துபோய் அவ்விடத்தில் புண் உண்டாகிறது. இந்தப் புண்ணைத் தான் நாம் சேற்றுப் புண்ணென்று சொல்கிறோம். சேற்றுப் புண்புழுக்கள் சுவாஸப் பைகளின் வழியாகவும், ஹிருதயத்தின் வழியாகவும் சென்று, குடலின் உள்பக்கத்தை யடைந்து, தோல்ச் சதைகளில் இசைந்துகொண்டு புண்களை உண்டாக்கிக்கொண்டு இருக்கின்றன. சேற்றுப் புண் புழுக்களின் முட்டைகள் வெய்யலின் உஷ்ணத்தினால் நசித்துவிடும். ஆகவே, வெய்யற்காலத்தில் மலங்களை மனிதர்

கள் வெய்யல்படுகிற தரைகளிலே இடுவார்களானால், அவைகளினால் சேற்றுப் புண் நோய் ஏற்படாது. மழை குறைவாகப் பொழிகிறப் பிரதேசங்களிலும், மழைகாலம் குறைவாக விருக்கிறப் பிரதேசங்களிலும், இந்நோய் ஏற்படுகிறதில்லை. மழைகாலம் அதிகமா யிருந்து கொண்டு தரை ஈரமாக விருக்கிறப் பிரதேசங்களில்தான் இந்நோய் பிரபலமாக ஏற்படுகிறது. களிப்பில்லாமல் மணல் சரியான நிலங்கள் சேற்றுப் புண் புழுக்களின் முட்டைகள் விருத்தியாவதற்கு ஏற்றவை. திருவாங்கூர், கொச்சி, மலையாள ஜில்லா, தென் கன்னடம், இந்தப் பிரதேசங்களில் மழைகாலம் அதிகமா யிருக்கிறது ; இவைகளில் தரையும் ஈரமாக விருக்கிறது. மனிதர் மலங்கழிப்பதினால் மாத்திரமே இந்நோய் உண்டாகிறதென்பதில்லை. பன்றிகளும், மாடுகளும் சேற்றுப் புண் புழுவுள்ள மனிதமலங்களைத் தின்று மலங்களை யிடுவதினால்கூட இந்நோய் உற்பத்தியாகிறது. சாணியினால் வீடுகளை மெழுகுகிற வழக்கம் நம்முடைய தேசத்தில் இருப்பதால், ஜனங்கள் சாணியில் சேற்றுப் புண் புழு இருக்கக்கூடும் என்பதை கவனிக்கவேண்டும். சேற்றுப் புண் முட்டைகளை வயிற்றில் வைத்துக்கொண்டிருக்கிற ஜனங்கள் ரக்தக் குறைவோடும், சோமபலோடும், எவ்வித வேலையிலும் அச்சிரத்தையோடும், இருப்பார்கள். இந்நோயையுடைய குழந்தைகள் சரியாக வளருகிறதில்லை. தைமால் அல்லது சிம்போடியம் எண்ணெயை பேதிக்காக சாப்பிட்டால் இந்நோய் தீரும். பட்டணங்களில் குப்பைக்காரர்கள் கக்கூஸுகளை சுத்தம் செய்கிறபடியால் கக்கூஸுகள் சிமெண்டினால் கட்டப்பட வேண்டும். அவைகள் தினந்தோறும் ஜலத்தினால் அலம்பப்படவேண்டும். எந்த இடங்களில் கக்கூஸுக்காக கட்டிடங்கள் ஏற்படுத்தப்படக் கூடுகிறதில்லையோ, அவ்விடங்களில் வெய்யல் நன்றாய்ப் படக்கூடிய ஸ்தலங்களில்தான் கக்கூஸுகள் அமைக்கப்பட வேண்டும். கிணறுகளுக்கு அருகில், சக்கூசுகளின் நிமித்தம் பள்ளங்கள் வெட்டப்பட்டு உபயோகிக்கப்பட்டால், அவைகளின் மூலமாக கிணறுகளின் நீர் கெட்டுப் போய்விடும். அதில் சேற்றுப் புண் மூலங்கள் ஏற்படும். மல நிவர்த்திக்காக உட்காரும்பொழுது எல்லோரும் பாதக் கட்டைகளை உபயோகித்தல் வேண்டும்.



## நாட்டின் பாங்கற் நண்ணினேன் காண்பது.

(K. R. R. சாஸ்திரி, M. A. B. L. & M. துரைப் பிள்ளை.*)

### உழவனது உழைப்பு. I.

வாழ்க்கையின் ஓய்வுகாலங்கட்கு ஆறுதலையும், அமைதியையும் அளித்தின்பம் ஊட்டுவது கிராமம் ஒன்றே. ஆம் — அவ்விடத்தே தான் யாம் அனைவரும் சிற்றில் விளையாடியதும், சிறுதேர் உருட்டியதும் ; அங்கே தான் பிரம்போடு தோன்றி பிள்ளைகள் மனதில் பீதியைத் தரும் "வாத்தியார்" தம்மிடம் பெற்றனம் விழுமிய தமிழின் ஓர் சிறுபாகம். இன்னன பலப்பல இனிய தோற்றங்கள் எம்மூர் நினைக்கில் மனமிடைத் தோன்றுவதாகும். பண்டைய வாழ்வைப் பெரிதும் பகைத்து உதறித் தள்ளி வாழும் இன்றும், இக்கொடுங்காலத்திலும் பதின்மரில் எண்மராவது அறிந்தோ, அறியாமலோ, கிராமவாழ்க்கையின் பெருநலத்தில் ஈடுபட்டுளார் என்பது மிகையாகாது. ஆண்டு பல தென்தேய நாட்டுப் பகுதிகளில் பழகு மெவரும், அவ்விடம் வதியும் கிராமத்தானையும், அவனது தேவைதாம் எவையென அறியாதிருக்க வியலுமோ ?

காய்ப்பேறிய கரத்தொடு கானலிலும் கடும் மாரியிலும் கழனி ஒன்றே களிப்பை தருமிடம் என்றுள அவனே, ஒன்றுந் தெரியாத பச்சைப் பசுங்குழவி இருதயம் உடைய அந்த உழவனே, பண்டைய உலகோடு இன்றைய நாகரீகந் ததும்பி யிருப்பதாக் கொண்டுள உலகினை பிணிப்பவன் அதோ, இந்தியாவின் இனிமைப் புதல்வன் முழுத் துண்டொன்றை தன்னிடுப்பிலும், துவாரம் பலபல உடைய ஓர் பெருங் கந்தலைத் தன் தலையிலும் சுற்றி வயலில் நிற்கிறான். தலைமுறை தலைமுறையாக வந்துள அத்தொழிலைச் சிறிதும் மாறுதலில்லாது செய்துவரும் இவன் கங்குல்போதிலே தலைக்கோழி கூவும் அவ்வேளையிலேயே, தன் வயல் சென்று உழைத்து மாலை நெருங்குஞ் சமயத்தில் உழைப்பின் மிகுதியால் களைத்து தன்மனைவிகொணரும் பல்லாவின் கஞ்சை பக்கத்தே நிற்கும் நிழல்தரும் மரத்தடியில் வெகு ஆநந்தமாக நாளை என் செய்வாம் என்ற எண்ணமே இளாது உட்கொண்டு வெற்றிலையு மிட்டு நிற்கின்றான் ; அக்காலம் உதவிக்

* என் மாணாக்கர் M. துரைப் பிள்ளை மிகவும் உதவி செய்தி

கவன் மகன் தோன்றுகிறான். எருதுகளோ சலிப்பின்றி சதா வெகு பொறுமையோடு சென்ற விடமே சென்று திரும்பும்

இத்தகை நிலைமையினைக் கண்ணுறும் எவரது நிலைமையும் எமது கிராமத்தானது என்று மொழியா உயரிய உழைப்புக்கு அரியது அன்று.

### நீர்ப்பாய்ச்சல்—

### பழையதும், புதியதும்.

காவிரிபோன்ற உபயோகமுள்ள நதிகள் தென்னிந்தியாவில் மிகச் சிலவே வானோக்கி வாழும் வற்றிய ஏரிகளிலிருந்து வரும் நீர் கொண்டு வாழும் ஜில்லாக்கள் பலவாகும். தென்னாறுகாடுபோன்று ஆறு ஏரியும் இல்லாது கேணியி னுதவியையே நாடி நிற்கின்ற பல பல இடங்களு முண்டு. நீர்ப் பாய்ச்சுவதற்காகப் பல கருவிகள் கொண்டுளர். அவைகளில், ஒன்று மிகப் பழமையானதாரும் அதனை ஏற்றம் என்பர். ஓர் ஏற்றத்திலிருந்து நீர்ப்பாய்ச்ச வேண்டுமாயின் குறைந்தது மூவர் வேண்டும் அவர்களில் இருவர் மேலே உள்ள துலாக் கோலில் நின்று இங்கு மங்குமாகச் சென்றுகொண் டிருப்பர். மூன்றாமவன் கேணியின் மேற்புறத்திலுள்ள நீண்ட கட்டைகளில் நின்று ஏற்றப் பாட்டோடு நீர் மொண்டு வயலுக்குப் பாய்ச்சுவான். மற்றவையோ எண்ணெய் இறக்கும் இயந்திரங்களைப் பின் பற்றி ஆக்கப்பட்டுள்ளன. வயதுசென்ற எருதுகளையும் பிணைக்கக் கூடிய சுலப முறைகளில் இவை உள்ளன. இத்தகைய இயந்திரங்கள் மாடுகளை முன்னும் பின்னுமாகச் சென்று வருமாறு துன்பப்படுத்துவது இல்லாமையால் தற்போது மிகவும் பிரசித்திபெற்று வருகின்றன.

### அறுவடை நாள்.

உழைப்பிற் கேற்ற ஊதியம் பெறுநாளிலன்றோ உண்மை—மாதம் பல செய்த மட்டிலா உழைப்பிற்குப் பின்னால் அதன் பயனைப் பெறுநாள் குறுகும் ஆணும் பெண்ணும் அறிவாளேந்தி பந்தி பந்தியாய் முற்றிய மணியால் முறிந்து நிற்கும் பயிரிடைப் புகுந்து பரிவொடு அறுப்பர்; பின்னர் களத்திடை கொணர்ந்து குவிப்பர் தாம் அறுத்த மணிதாங்கிய கதிர்களை மணிகளையும் அவை தாங்கிய தாட்களையும் பிணை மாடுகளால் பிரித்து, வைக்கோலைக் கட்டுக் கட்டாகக்



கட்டி வண்டிகளில் ஏற்றி அனுப்புங் காட்சியை மாந்தரனைவரும் மகிழ்வோடு நோக்குவர். இதுகாலத் தன்றோ பொங்கும் மகிழ்ச்சி எங்கும் பெருகப் பொங்கல் வருவது! கிழவனும் குமரனும், குமரியும் கிழவியும் கொண்டாடும் தினம் இதுவன்றோ. இது போழ்து, தாம் அரிதில் உழைத்த உழைப்பின் பயனைப் பெற்ற தானிய மணிகளை முதன் முதலா ஒளிதரு கடவுட்கு அர்ப்பணம் செய்வர். புது வருட மணியெடுத்து பொங்கலிட்டுப் பூசையுந் தந்து புந்தி குளிர தத்தம் மக்களும் மனைவியும் ஒன்றுசேர இருந்து உவகையுடன் உண்பர். தங்கட் கிதுவரை உதவிவந்த எருது, பசு இவைகட்கு ஓய்வு தந்து அவைகட்காகப் பூசையிட்டு முறுக்கு, வடை, கரும்பு முதலியவை கோர்த்த பூமாலை யிடுவர். பூரித்தே அவர் பொங்கலோ பொங்கலென முழங்கி ஆடிப்பாடி ஆனந்தங் கொள்வர். இத்தகைக் களிப்பு இருநிலம் உழுது வாழ்வார்க் கன்றி பிறிதெவர்க்கோ உரித்து?

(தொடரும்)

## பிரமச்சரிய வாழ்வு.

### முற்கால இந்தியாவிலும் தற்கால இந்தியாவிலும்.

இந்த இதழில் சிறுவர், சிறுமிகளுடைய விவாக வயதைப் பற்றி எழுத உத்தேசித் திருந்தோம். ஆனால் அந்த மகத்தானதும், அதிக சிக்கலான பிரச்சினையில் புகுமுன் முந்தி நாம் எழுதியதற்கும் அதற்கும் இடையே விட்டுப்போயிருக்கும் ஒரு விஷயத்தைப் புகுத்த வேண்டி யிருப்பதால் அந்த விஷயத்தைப்பற்றி இந்த இதழில் எழுத முடியவில்லை. விட்டுப்போயிருக்கும் அந்த விஷயமானது முற்கால இந்தியாவிலும் தற்கால இந்தியாவிலும் இருந்து வரும் பிரம்மச்சரிய வாழ்வைப்பற்றியதே யாகும். இந்த விஷயத்தில் நாம் நுழைவதற்கும், இதைப்பற்றி பச்சையாக நாம் சில விஷயங்களைச் சொல்லுவதற்கும் நமது நேயர்களுடைய மன்னிப்பைக் கோருகிறோம். தற்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒவ்வொரு மாணவனும் ஒரு அந்நிய பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டி யிருக்கிறது. சாதாரணமாக 5-வது வயதில் இந்த கல்விப் பயிற்சி ஆரம்பமாகிறது. இது அதி பால்ய காலமென்றே நாம் நினைக்கிறோம். இந்த 5-வது வயதில் படிப்பை ஆரம்பித்தாலும் பி. ஏ. பரீட்சையில் தேறுவதற்குள் 20-வயதாகி விடுகிறது. அதற்குப் பிறகு சட்டப் பரீக்ஷைக்கோ, அல்லது இஞ்சினீரிங் பரீக்ஷைக்கோ, அல்லது வைத்தியப் பரீக்ஷைக்கோ

படிப்பதெனில் 2, 3 வருஷகாலமாகி விடுறது. எல்லா விஷயங்களையும் சேர்த்து யோசிக்கையில் 25 வயதுக்கு முன் மாணவர்கள் சம்பாதிக்கக்கூடிய நிலைமையை அடைவதில்லை. படிக்கும் காலத்தில் மாணவர்கள் பிரம்மச்சாரிகளாக இருந்துவர வேண்டுமென்றும், இந்தக் காலத்தில் இன்னொரு பாலினரைப் பற்றிய விஷயங்களையும், மிருக உணர்ச்சியையும், ஸ்திரீ சல்லாபத்தையும் விலக்கு செய்து கொள்ள வேண்டியது அவசியமென்றும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மாணவர்களுடைய வாழ்வில் அருமையானதாகிய இந்தக் காலத்தில் அருவருக்கத்தக்க கெட்ட பழக்கங்கள் அவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடும். இந்த அருவருக்கத் தக்க கெட்ட பழக்கங்களில் முஷ்டிமைதுனம் செய்வது சாதாரணமாக இருந்துவருகிறது. இதனால் அவர்களுடைய ஆரோக்கியம் கெட்டு, சரீரத் தென்பு குறைந்து, அவர்கள் அற்ப ஆயுளுடையவர்களாகி விடுகிறார்கள். இது சம்பந்தமாக ஒரு பிரபல வைத்தியர் தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம்:—

"முஷ்டிமைதுனமாகிய அருவருக்கத்தக்க கெட்ட செய்கையைப்போல் மனித சமூகத்திற்கு பிளேக்காவது, யுத்தமாவது, வைசூரியாவது அவ்வளவு கெடுதலை உண்டு பண்ணுவதில்லை. நாகரீகம் வாய்ந்த சமூகங்களை இது அழித்து விடுவதாக இருக்கிறது. இந்தப் பழக்கமானது அடிக்கடி அனுஷ்டிக்கப்பட்டு, தேசத்தினரின் சரீர சக்தியைக் கெடுத்து விடுகிறது."

துரதிர்ஷ்ட வசத்தினால் தற்காலக் கல்வி முறையில் இத்தகைய விஷயங்களைப்பற்றி மாணவர்களுக்கு நல்லறிவைப் புகட்டுவதற்கு எத்தகைய ஏற்பாடும் இருந்து வரவில்லை. இதன் பலனாக ஒரு ஜாதியே க்ஷீணதசை யடைந்து ஆண்மைத் தனத்தை இழந்து வருகிறது.

ஆகாரக் கிரம விஷயத்திலும் மாணவர்கள் அதி ஜாக்கிரதையாக இருந்து வரவேண்டும். மிருக உணர்ச்சியை சரீரத்தில் உண்டு பண்ணத்தக்க ஆகாரப்பதார்த்தங்களை அவர்கள் விலக்குசெய்யவேண்டும். "சாமான்ய விஷயங்கள்" என்ற நூலில் டாக்டர் கெல்லாக் சொல்லுவதாவது:—

"ஆகாரக் கிரமத்தினால் சில நூலாசிரியர்கள் சொல்லியிருப்பதைப் போல் அபத்தமானது வேறொன்றில்லை. நாம் சாப்பிடும் ஆகா-



ரத்திற்குத் தகுந்தபடியே நமது எண்ணங்களும் இருந்து வருகின்றனவென்று அங்க வியாபார சாஸ்திரம் போதிக்கிறது. பன்றி மாமிஸம், நுண்மையான மாவினால் செய்த ரொட்டி, அதிக புஷ்டியைக் கொடுக்கத்தக்க பஜ்ஜி, பக்ஷியங்கள், குழம்பு, ஊறுகாய் இவைகளைப் புசிப்பவர்களும், காப்பி அல்லது தேத் தண்ணீரைப் பானம் செய்வோரும், புகையிலையை உபயோகிப்பவரும் எவ்விதம் உயரப் பறப்பது அசாத்தியமோ அவ்விதமே அவர்களுடைய எண்ணங்களும் தூய்மையாக விருப்பது அசாத்தியம். அவர்கள் தங்களது சரீரத்தை நெறியாக வைத்துக்கொண்டிருந்தால் அபூர்வமான காரியங்களை அவர்கள் சாதிக்கலாம். ஆனால் ஆண்டவனுடைய அனுக்கிரகமிருந்தாலன்றி அவர்களுடையமனதானது தூய்மையாகவிருக்கமுடியாது."

டாக்டர் கோவன் என்பவரும் இதை ஆதரிப்பதோடு, "புதிய வாழ்வைப் பெறும் வழி" என்னும் நூலில் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"சரீரத்தில் உத்வேகமும்பரபரப்புமதீவிரமாகஏற்படுவதற்கு ஆகாரக்கிரமத்தில் ஏற்படும் தவறேமுக்கியகாரணமாக இருக்கிறது. நமது குழந்தைகளில் ஆயிரக் கணக்கானவைகளுக்கு மிகவும் நன்றாகப் பக்குவம் செய்யப்பட்ட ஆகாரங்களும், பன்றிக் கொழுப்பும், கோழி முட்டைகளும், அப்பங்களும், மாமிஸமும், மிளகு, உப்பு, வெல்லம், ஊறுகாய், தேத்தண்ணீர், காப்பி இவைகளும், சில குழந்தைகளுக்கு போதையைத் தரத்தக்க மதுஸாரங்களும் கொடுக்கப்படுகின்றன இத்தகைய குழந்தைகள் காமவெறி இல்லாமலிருப்பது அசாத்யம், 5-வயதுக் குழந்தையொன்று தெய்வப் பிறவியாயினும் அதற்கு மாமிஸக் குழம்பு, தேத் தண்ணீர், காப்பி இவைகளைக் கொடுப்பின் தவறான வழியில் அதனுடைய புத்தி பிரவர்த்திக்காமலிருப்பது சாத்தியமில்லை. சுபாவமாகவே இத்தகைய தன்மையுள்ள பூவுலகக் குழந்தைகளுக்கு இவைகளைக் கொடுப்பது மிகவும் கெடுதலான தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?"

இக்காலத்தில் மாணவர்கள் இத்தகைய கெடுதலான ஆகாரக் கிராமத்தையே அனுஷ்டிக்கிறார்கள். விவாகம் முதலியவைகளைப் பற்றியே அவர்கள் எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், முற்கால பிரம்மச்சரிய வாழ்விலிருந்து எத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டிருக்-

று தென்பதைக் கவனியுங்கள். நவீன நாகரீகத்தில் எத்தனை கெடுதி விளைந்திருக்கிறது? எத்தனை இடுக்கண்களை மனித சமூகத்திற்கு அது உண்டுபண்ணியிருக்கிறது? தற்காலத்தில் சாஸ்திரப் பரீக்ஷைகளின் மூலமாகத் தெரிந்திருக்கும் விஷயங்களை ஒருவரும் லக்ஷியம் செய்யக் காணோம். தற்கால சாஸ்திரீயப் பரீக்ஷைகளின் மூலமாக முற்காலத்தில் நம்மவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த நியதிகளின் விசேஷம் வெளிப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் பிர்ம்மசாரிகள் விவாக மன்னியிலும், நெறி கெடாமலுமிருந்து வந்தனர். முற்காலற்தில் பூணூல் போட்டு வைக்கும் காலத்திலேயே அக்ஷராப்பியாசம் ஆரம்பிக்கப்பட்டது. மநு சொல்லியிருப்பதாவது:—

“பிராம்மணக் குழந்தை பிறந்த எட்டாவது வருஷத்தில் அதற்கு பூணூல் போட்டு வைக்கவேண்டும். அரசர்களுககு 11-வது வயதிலும், வைசியர்களுக்கு 12-வது வயதிலும் பூணூல் போட்டு வைக்கவேண்டும்:”

இதிலிருந்து புராதன காலத்தில் எட்டு வயதுக்குமேல் வித்தியாப்பியாசம் செய்விக்கப்பட்டதேயன்றி இப்பொழுது நடந்து வருவதுபோல் 5-வது வயதில் வித்தியாப்பியாசம் ஆரம்பிக்கப்படவில்லையென்று தெரிகிறது. “பிரம்மசாரிகள் ஆகாரவேலைகளுக் கிடையில் எதையும் சாப்பிடக்கூடாதென்றும், அளவுக்கு மிஞ்சியும் எதையும் புசித்துவிடக் கூடாதென்றும்” விதிக்கப்பட்டிருந்தது, தேனையும், மாமிசத்தையும், வாசனைத் திரவியங்களையும், பூமாலைகளையும், தித்திப்பான பழரஸங்களையும், புளித்துப்போன தித்திப்புப் பதார்த்தங்களையும், தைலங்களையும், கண்களுக்கு மைகளையும், பாதரக்ஷைகளையும், குடைகளையும், துராசைகளையும், கோபத்தையும், பேராசையையும், சங்கீதத்தையும், வேட்டையாடுதலையும், பிறருடைய சண்டைகளில் சம்பந்தப்படுவதையும், வதந்தி கட்டி விடுவதையும், பொய் சொல்லுவதையும், ஸ்திரீகளை ஏறெடுத்துப் பார்ப்பதையும், அவர்களைத் தீண்டுவதையும், பிறரை அடிப்பதையும் விலக்குசெய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் தனித்தே படுத்துறங்கவேண்டுமென்றும், தமமுடைய விந்தை ஒழுக விடுகிறவர் தம்முடைய பிரதிக்ஞையை மீறி நடந்தவராவாரென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. நல்ல குதிரைக் காசாரி குதிரைகளை புத்திசாலித்தனமாக அடக்கிக்கொண்டு போவதுபோல் புத்திசாலிகள் தங்



களுடைய உணர்ச்சி பலவழிகளில் திரும்பி விடாதபடி கட்டுக்குட்படுத்திக்கொண்டு போகவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய புத்தி மதிகளை மநு அக்காலத்திய மாணவர்களுக்குப் போதித்திருக்கிறார். இக்காலத்திய மாணவர்கள் தங்களுடைய பால்ய உத்வேகத்தையும், ஆரோக்கியத்தையும், புத்தியையும், ஞாபகசக்தியையும், அழகையும், ஆண்மைத் தனத்தையும் காப்பாற்றிக்கொண்டு அடுத்த கிரஹஸ்தாசிரம வாழ்வுக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டுமெனில் மேலே கண்டுள்ள புத்திமதிகளைப் பற்றி தீர்க்கமாக ஆலோசித்து, அவைகளைப் பின் பற்றும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

[ஆரோக்கிய தீபிகை.]

## Forests & Ryots,

### காடுகளும் கிராம ஜனங்களும்.

செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சட்டஸபையின் மீடிங்கில், மிஸ்டர் கே. ஆர். கரண்டு அவர்கள் இந்த மாஹாணக் காட்டு நிர்வாஹக் குறைகளையும் கிராமத்தவர்கள் காடுகளை ஒழுங்கு தப்பி உபயோகிப்பதையும்பற்றி விசாரணைகளைச் செய்து சீர் முறைகளைச் சொல்லவேண்டிய நிமித்தம், கவர்மெண்டார் ஒரு கம்மிட்டியை ஏற்படுத்தவேண்டும் என்று ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

தீர்மானத்தை பிரேரேபிக்கிற ஸந்தர்பத்தில், அவர் காடுகளைப் பற்றின விதிகள் கிராம ஜனங்களுக்கு வெகுகஷ்டங்களை விளைக்கின்றனவென்று கூறினார். தன்னுடைய ஜில்லாவாகிய தென் கன்னடத்தில் சில இடங்களில் ரிசர்வுகள் கிராமத்தார்களின் நிலங்களுக்கு அடுத்தாப்போலவே இருக்கின்றனவென்றும், சில கிராமங்களில் 100 ஏகராக்கள் விஸ்தீரணமுள்ள நஞ்சை நிலங்கள் இக்காரணத்தினால் சாகுபடி செய்யப்படாமல் கிடக்கின்றனவென்றும், ரிசர்வுகள் சாகுபடி நிலங்களையொட்டியிருப்பதால் கிராமத்தார்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றனவென்றும், அவ்விஷயத்தைப்பற்றி விசாரணைகளைச் செய்வதற்காக, ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், கூறினார். மேலும், விவசாயமந்திரியவர்களும் மாடுகளுக்குப் போதுமான மேய்ச்சல் நிலங்கள் கிராமங்களில் இருக்கவேண்டிய நிமித்தம் கவனத்தைச் செலுத்தவில்லையென்றும், மேய்ச்சல் நிலங்

கள் ஏராளமாகத் தாழ்ந்த வகுப்பினர்களுக்கு தர்காஸ்து செய்யப்படுகின்றனவென்றும், அப்படி தர்காஸ்து செய்யப்பட்ட நிலங்கள் சாகுபடியிலில்லாமல் தரிசுகளாகவே கிடக்கின்றனவென்றும் கூறினர். இன்னமும், கவர்மெண்டார் பெர்மிட்டுக் கட்டணங்களை யுயர்த்தி விட்டார்களென்றும், பாரெஸ்டு விதிகள் கிராமத்தார்களுக்குச் சொல்ல முடியாத கஷ்டங்களை விளைக்கின்றனவென்றும், சில கிராமங்களில் மேய்கால் பூமிகள் தர்காஸ்தில் கொடுக்கப்பட்டதில் மேய்ச்சலுக்கு நிலங்கள் இல்லாமலே போய்விட்டனவென்றும், கூறினர். மேலும், மாஹாணத்திய காட்டுப் பிரதேச விஸ்தீர்ணம் 70,000 சதுர மைல்களாக விருக்கையில், 3000 சதுர மைல்கள் தான் கிராமத்தார்களின் நிர்வாஹத்திற்கு ஒப்பிவிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், இந்தக் குறைந்த விஸ்தீர்ணம் வியவஸாய முன்னேற்ற மேற்படுவதற்குப் போதாதென்றும், காடுகள் அதிகமாக விருப்பதால் ஜனத்தொகை குறைவுபட்டிருக்கிறதென்றும், விஷஜுரம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறினர். காடுகளிலிருந்து, மேய்ச்சல் கட்டணங்களின் மூலமாக வருகிற சுவல்ப வரும்படி தவிர வேறே ஒருவித வரும்படியும் கவர்மெண்டாருக்கு வருகிறதில்லையென்றும், கவர்மெண்டார் இப்படி வரும்படியில்லாமல் அதிகச் சிலவுகளைச் செய்து காடுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்களென்றும், இவ்விஷயங்களையெல்லாம் சரியாய் ஆலோசித்து, சீர்முறைகளையும், கவர்மெண்டின் பாரெஸ்டு நோக்கம் மாற்றப்படவேண்டிய வழியில் யோசனைகளையும், சொல்லவேண்டிய நிமித்தம் ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் கூறினர்.

மிஸ்டர் ஜி. ஹரி சர்வோத்தம ராவ் அவர்களும், மிஸ்டர் டானியல் தாமஸ் அவர்களும் தீர்மானத்தை ஆமோதித்துப்பேசினர்கள். மிஸ்டர் டானியல் தாமஸ் அவர்கள் மாஜிஸ்டிரேட்டுகள் பாரெஸ்டு இலாகாவோடு கலந்துகொண்டு நடந்துவருகிறார்களென்றும், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுகள், பாரெஸ்டு குற்றங்களுக்கு அபராதங்கள் போடப்படுகிற விஷயத்தில் அபராதத்தை இவ்வளவிற்குக் குறைக்கப்படாதென்று தூண்டு உத்திரவுகளை கீழ்ப்பட்ட மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்பியிருக்கிறார்களென்றும் கூறினர்.

மிஸ்டர் வி. ஐ. முனிசாமி பிள்ளை அவர்களும் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினர். தாழ்ந்த வகுப்பினர்கள் பாரெஸ்டு விதிக



களால் கஷ்டப்படுகிறார்களென்றும், காட்டு ஸ்தலங்களை தர்க்காஸ்து செய்யும்படி அவர்கள் கேட்டுக்கொண்டால், ரெவினியூ இலாகாக்காரர்கள் ரெவினியூ இலாகாவின் நிலங்கள் முழுமையும் தர்காஸது செய்யப்பட்ட பின்புதான் பாரெஸ்டு நிலங்கள் தர்காஸ்து செய்யப்படக் கூடுமென்று சொல்வது வழககமா யிருக்கிறதென்றும் கூறினர்.

மிஸ்டர் ஆர். நாகன் கௌடா அவர்கள் மத்தியம ஜில்லாக்களில் மழையில்லாமையால் காடுகள் அழிந்துபோயினவென்றும், பின்பு விருக்ஷங்கள் அவைகளில் நடப்படவில்லையென்றும், அது விஷயமாக ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், வாட்சுமென்களுக்கும், கிராமத்தார்களுக்கும எப்பொழுதும் சச்சரவுகளிருந்துகொண்டு வருகின்றனவென்றும், காட்டுமிருகங்களினால் கிராமஜனங்களுக்குப் பலவிதங்களில் துன்பங்கள் ஏற்படுகின்றனவென்றும், கிராம ஜனங்களுக்கு துப்பாக்கிப் பிரயோகச் சுவதந்தரத்தையும், காட்டு மிருகங்களை வேட்டையாடச் சுவதந்திரத்தையும் கவர்மெண்டார் கொடுக்கவேண்டுமென்றும் மொழிந்தார்.

திவான் பஹதூர் கேசவ பிள்ளையவர்கள் இதன்பின்புபேசினர். பாரெஸ்டு விதிகளும், உத்திரவுகளும் ஆதியில்போலவே கஷ்டங்களை விளைத்து வருகின்றனவென்றும், காட்டிலாகாவினது ரிஸர்வுகளிற்கடுத்த மணல் பிரதேசங்களைக்கூட ஆக்கிரமித்துச் சேர்த்துக் கொள்ளுகிறதெனறும், சில வருஷங்களிற்கு முன் ஏற்பட்ட கம்மிட்டியின் சிபார்சுகள் எவ்வளவு தூரம் காட்டிலாகாவால் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்று கண்டறியப்படவேண்டுமென்றும் மொழிந்தார். மேலும், காட்டு இலாகா மெம்பர் அவர்கள் பாரெஸ்டு குற்றங்களின் சம்பந்தமாகத் தூண்டு உத்திரவுகளை அதிகாரிகள் கீழ்ப்பட்ட மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்புகிற வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்றும், தீர்மானத்தை கவர்மெண்டார் அங்கீகரிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

மிஸ்டர் ஜே. ஏ. ஸல்டானா அவர்கள் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில், அதிகக் காடு வளர்ப்பினால் காட்டு மிருகங்களிற்கு வாஸஸ்தலங்கள் ஏற்படுகின்றனவென்றும், விஷ ஜுரங்கள் உண்டாகின்றனவென்றும், காடுகள் ஈரத்தைஇழுத்துக்கொள்வதால் நிலங்களிற்கு மழை பொழிவதால் ஏற்படக்கூடிய நன்மை தக்கவாறு

ஏற்படுகிறதில்லையென்றும், கவர்மெண்டார் பாரெஸ்டு சம்பந்தமாக சில முறைகளையும் யோசனையும் சரியானவையென்றேகைக்கொண்டு அநுஷ்டிப்பதால் தேசத்தின் வியவஸாய முயற்சிகள் திருப்திகரமாக நடத்தப்படக் கூடுகிறதில்லையென்றும் மொழிந்தார்கள்.

பிறகு, மிஸ்டர் ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்கள் பின்வருமாறு பேசத் தொடங்கினர் :---சில காலத்திற்கு முன் சட்ட ஸபையானது காடுகள் கிராமங்களிற்கு ஒருமைல்தூரத்தில் இருக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கைக்கொண்டது அந்தத் தீர்மானமானது இன்னும் அமுலுக்கு வரவில்லை. மேலும், மேய்கால் பூமிகள் வரவர தர்காஸ்தில் கொடுக்கப்பட்டு வருகின்றன. பவுண்டு கட்டண வீதங்கள் உயர்த்தப்படுகின்றன. கிராமவாஸிகள் மாடுகளை வைத்து ஸவரக்ஷணை செய்வதில் அதிககஷ்டங்களை அநுபவிக்கிறார்கள். நாகரீக மார்க்கத்தில் செல்கிற எந்த கவர்மெண்டும் கிராம ஜனங்களின் சுகத்தையே தேடவேண்டும். நம்முடைய கவர்மெண்டார் கிராம ஜனங்களின் சுகத்தைக் கருதி வேலை செய்கிறார்களா வென்பதைச் சோதனைசெய்ய இப்பொழுது ஆலோசனையிலுள்ள தீர்மானமே போதுமானது.

கனம். லா மெம்பர் அவர்கள் பதிலளித்தார் :---தான் கிராம வாஸிகளுடைய கஷ்டங்களை யுணர்ந்திருக்கிறதாகவும், கவர்மெண்டார் அவர்களுடைய க்ஷேம விருத்தியை யுத்தேசித்தே 3500 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ள காடுகளை அவர்களுடையநிர்வாஹத்திற்கு ஒப்பிவித் திருக்கிறார்கள் என்றும், பஞ்சாயத்துகள் காடுகளை நிர்வஹிக்கிற சீரைப்பற்றி சீப் கன்ஸர்வேடர் அவர்கள் ஒரு ரிபோர்டை எழுதியிருக்கிறாரென்றும், அந்த ரிபோர்டை கவர்மெண்டார் இப்பொழுது பார்வையிட்டுக்கொண் டிருக்கிறார்களென்றும், இந்த சந்தர்ப்பத்தில் கவர்மெண்டார் தங்களுடைய பாரெஸ்டு சம்பந்தமான நோக்கங்களை மாற்றவேண்டுமா வென்பதையும் ஆலோசிக்கப்போகிறார்களென்றும், கவர்மெண்டாருக்கு இது ஸம்பந்தமாக ஏற்படும் யோஜனைகள் சட்ட ஸபைக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படுமென்றும், ஆகையால் கம்மிட்டி ஒன்றை இந்த ஸமயத்தில் ஏற்படுத்துவது உசிதமன்றென்றும் மொழிந்தார்.



மிஸ்டர் பரசுராம் ராவ் அவர்கள் இதன் பின்பு தீர்மானத்தை யாதரித்துப் பேசினர்.

ஸர். பரசுராம் பத்ரோ அவர்கள லா மெம்பர் மொழிந்த் வார்த்தைகளைப்பற்றி ரொம்பவும் திருப்தியாகப் பேசினர். அவர் மொழிந்ததில், ரெவினியூ இலாகாக்காரர்களும், பாரெஸ்டு இலாகாவின்சிப்பந்திகளும் அதிக கஷ்டங்களைக் கிராம ஜனங்களுக்குக் கொடுக்கிறார்களென்றும், பாரெஸ்டு ரூல்கள் அதிகக் கடுமையாக விருக்கின்றனவென்றும், இவ்விஷயங்களைக் கவர்மெண்டார் நன்றாய்க் கவனித்து சீர் செய்யாவிட்டால் ஜனங்களுக்கே கவர்மெண்டாரிடத்தில் நம்பிக்கையும் விசுவாஸமும் போய்விடுமென்றும் கூறினர்.

மிஸ்டர் விசுவநாத் தாஸ் அவர்கள் சொந்தக் காடுகளை உடைத்தான தனி நபர்கள் மேய்ச்சலுக்காகக் கட்டணங்களை வசூலிக்கிறார்களென்றும், கிராம ஜனங்கள் சொல்லக்கூடாத கஷ்டங்களை அநுபவிக்கிறார்களென்றும் மொழிந்தார்.

மிஸ்டர் ஏ. பி. ஷெட்டி அவர்கள் காட்டு சம்ரக்ஷணத்தைக் காட்டிலும், வியவஸாய விருத்தியையே கவர்மெண்டார் ஆதரிக்க வேண்டுமென்று கூறினர்.

மிஸ்டர் டி. நாராயண ராவ் அவர்கள் சொன்னதாவது :—தீர்மானத்தில் கேழ்கப்பட் டிருப்பதற்கும், லா மெம்பர் மொழிந்திருப்பதற்கும் சம்பந்தமில்லாம லிருக்கிறது. கம்மிட்டி ஏற்பட்டு விசாரித்தால் பல சீர் கேடுகள் ஒழியும். மேலும், பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு பாரெஸ்டு குற்றங்களை விசாரணைசெய்யவும், தண்டனைகளை விதிக்கவும் அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

மிஸ்டர் கோடி ரெட்டி அவர்களும் கம்மிட்டி ஒன்று வேண்டுமென்றே கூறினர்.

பின்பு தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு ஸபையாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அனுதினமும்
உபயோகப்படுத்தினால் ப்ளேக் ஜ்வரம், ப்ளேக்
கட்டிகள் கூட கிட்ட நாடமாட்டாது.

குளிர்ஜ்வரம், முறைக்காச்சல் ஜன்னியோடு,
உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித
ஜ்வரங்களுக்கு ராமபாணம்

எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கிய பிரசித்தி

இண்டியா, பர்மா சிலோன் எடன் முதலிய இடங்களில்
30 வருஷமாய் அநேக ஆயிரம் பிரயாணிகள்
ப்ளேகிலிருந்து காப்பாற்றப்படுவதே.

ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானகமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சததௌதக்ருதமும்

டிஷ பெரியசெட் 1-க்கு 2—2—0
சிறியசெட் 1—6—0

பாகிங் போஸ்டேஜீ பிரத்தியேகம்
கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனாமாக அனுப்பப்படும்.

வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு
அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

ஆயுர்வேத ஆசிரமம்
251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திவிலாசம்
"பண்டிட்"
மதராஸ்

டெலிபோன்
நெ. 287, மதராஸ்

ஏஜண்டுகள் தேவை



## மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

கீழ்க்கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நடந்த அக்டோபர்-மீ முடிவுவரை அப்படி பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின் ஸங்கியை 327 தான். ஒரு பங்கின் பொறுப்பு ஒரே ரூபாய்தான்.

இந்த பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட 50 பங்குதாரர்களுடைய பெயர், விலாசம், முதலிய விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

---

| நெ. | பெயர். | பஞ்சாயத்து. | ஜில்லா. | ஷேர். |
|---|---|---|---|---|
| 1 | K. ரத்தினபடையாச்சி | கோட்டேரி | தெ.ஆற்காடு | 2 |
| 2 | P, P. புரவிசில பூசாரியார் | – ஓமாந்தூர் | திருச்சி | 2 |
| 3 | N. போஜ பிள்ளை | ,, | ,, | 1 |
| 4 | R. A. அரவாண்டியாபிள்ளை | ,, | ,, | 1 |
| 5 | C. R. மூக்கபிள்ளை | ,, | ,, | 1 |
| 6 | K. M. வீரம ரெட்டியார் | எழுமலை | ,, | 1 |
| 7 | K. அபூபூக்கர்சாயபு | ,, | ,, | 1 |
| 8 | S U. K. நல்லப்ப ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 9 | சின்னதம்பி உடையார் | மேலபுஞ்செய் | வ.ஆற்காடு | 1 |
| 10 | R. முத்துசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 11 | A. வேதியம் உடையார் | ,, | ,, | 1 |
| 12 | A அண்ணாமலை உடையார் | , | ,, | 1 |
| 13 | அரிமுத்து கோன் | ,, | ,, | 1 |
| 14 | P. தனஞ்செய முதலியார் | புலரம்பாக்கம் | செங்கல்பட்டு | 1 |
| 15 | P. நாராயணசாமி நாயுடு | ,, | ,, | 1 |
| 16 | K. ராமஸ்வாமி ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 17 | M. கோவிந்த பிள்ளை | ,, | ,, | 1 |
| 18 | க. வெங்கடராமரெட்டி | பிரகடவரம் | மேல்கோதாவரி | 1 |
| 19 | சிவகுருலிங்கா ரெட்டி | ,, | ,, | 1 |
| 20 | முப்பிடி சீதாராம ரெட்டி | ,, | ,, | 1 |
| 21 | சக்ரப ஆஞ்சனேயலு | ,, | ,, | 1 |
| 22 | ஷேக் மோஹிதீன் சாயபு | ,, | ,, | 1 |
| 23 | கொ.நல்லமேகலசின்ன அங்கன்ன | கொம்மத்தி | கடப்பை | 30 |
| 24 | நல்லபால பெத்தன்ன கொல்ல | ,, | ,, | 10 |
| 25 | நல்லமேகல பெத்த அங்கன்ன | ,, | ,, | 10 |
| 26 | N.A. விருத்தாசலரெட்டியார் | வேம்பாலூர் | திருச்சி. | 1 |
| 27 | P. வீரப்ப நாய்கர் | ,, | ,, | 1 |
| 28 | சின்னது படையாச்சி | ,, | ,, | 1 |
| 29 | S, P. ராமஸ்வாமி உடையார் | ,, | ,, | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | P. பூமலை உடையார் | ,, | ,, | 1 |
| 31 | சோழமுத்து உடையார் | நசியம்பட்டி | சேலம் | 1 |
| 32 | அழகப்ப உடையார் | ,, | ,, | 1 |
| 33 | கருப்ப படையாச்சி | ,, | ,, | 1 |
| 34 | சோழமுத்து உடையார் | ,, | ,, | 1 |
| 35 | ராமஸ்வாமி கவுண்டர் | ,, | ,, | 1 |
| 36 | M. K. M. அருணசல கவுண்டர் | ,, | ,, | 1 |
| 37 | செல்லப்ப கவுண்டர் | ,, | ,, | 1 |
| 38 | அரசப்ப கவண்டர் | சங்ரபாளையம் | கோயம்புத்தூர் | 1 |
| 39 | முத்துசாமி கவண்டன் | ,, | ,, | 1 |
| 40 | கொமரசாமி கவண்டன் | ,, | ,, | 1 |
| 41 | சின்னப்ப கவண்டன் | ,, | ,, | 1 |
| 42 | உத்தண்டி கவண்டன் | ,, | ,, | 1 |
| 43 | K. ராமஸாமி செட்டியார் | திருப்பயர் | திருச்சி | 1 |
| 44 | N. ராமஸ்வாமி கவண்டர் | ,, | ,, | 1 |
| 45 | S. செல்லப்ப கவுண்டர் | ,, | ,, | 1 |
| 46 | R. ராமஸ்வாமி கவண்டர் | ,, | ,, | 1 |
| 47 | K. நாராயணசாமி ரெட்டியார் | ,, | ,, | 1 |
| 48 | ஆறுமுக உடையார் | பனையூர் | வ. ஆற்காடு | 1 |
| 49 | அருணசல நாயனர் | ,, | ,, | 1 |
| 50 | T. S. சிவராமகிருஷ்ணய்யர் | தென்கரை | மதுரை. | 5 |

(இன்னும் வரும்.)


குறைந்த விலை! நிறைந்த பலன்!!

# அத்புத ஆரூடம்.

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணு 4 அதிகம். வி. பி. வேறு கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து:—இதனல் வியாபாரம், உத்தியோகம், பயிர் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்க தோஷங்களும், கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும். சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 2. வி. பி. வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும். வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்.

பலாசூர். N. ராமநாத சாஸ்திரியார்,
அடையாறு லைப்ரெரி பண்டிதர்,
மைலாப்பூர்—சென்னை.

# இந்திய விவசாயம்.

—— : (o) : ——

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

*தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.*

---

## TALISMANS & CHARMS

**For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life**

| | | | |
|---|---|---|---|
| For Honour, Riches Learning and Greatness. | Rs. | 7 | 8 |
| For Health, physical Strength etc. | ... | 7 | 8 |
| For Power of Eloquence, Speeches, etc. | ... | 7 | 8 |
| For Success in any Undertaking or Litigation etc, | ... | 10 | 0 |
| For Success in Sport Racing, Cards, games of Chance, etc,, | | 7 | 8 |
| For Success in spiritual and Religious Life | ... | 10 | 0 |
| For Success in Trade and Business | ... | 10 | 0 |
| For Agricultural prosperity Farming, Good Crops etc., | | 7 | 8 |
| For Success in Mining Plumbago, etc. | ... | 100 | 0 |
| For Success in Gemming | .... | 225 | 0 |
| Reabbi Solomon's Special Talisman for every Success | | 15 | 0 |
| Specially valued and worn by every successful Hebrew, | 2nd quality | 21 | 0 |
| Do, | 1st quality | 30 | 0 |

*NOTE— A Money Order or G, C, Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs, 15. two, Rs, 25, three, Rs, 30 or more at a time at Rs, 10 per reading Remit with birth date, Always the full amount should be remitted in advance, No V. P. P.*

*Apply to*:—D. A. RAM DUTH.

*Astrologer, No. 80 and 55, (I. E.)* Cheku Street, Colombo CEYLON.

Imitations merely advertise the original

# AMRUTANJAN

The dictionary word for The Pain Balm for 40 years

## A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

## and All Aches & Pains

It is easier for a camel to go through the eye of a needle than for aches and pains to enter the kingdom of Amrutanjan!!!

**Price 10 As a pot.**

## Amrutanjan Depot

**Bombay** & **Madras**

*Published by* MR. A. RAJAGOPALA REDDI, President, Forest Panchayatdars' Union Ltd. Madras. *Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS CHINGLEPUT*